சி.ஆர்.எம்.பி. 2507/2021
சுந்தர மகாலிங்கம் த/பெ பாலகுரு

நாள் 21.02.2023

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 21.02.2023

**சத்திய பிரமாண வாக்குமூல தொடர்ச்சி–**

2008 ல் இருந்து தற்போது வரை திருவில்லிபுத்தூர் சாலிய சமூக மக்களுக்கு பயன் பெற வேண்டிய சொத்துக்களை அவர்களுக்கு செலவு செய்யாமல் அந்த சமூகத்திலிருந்து வரும் பணங்களை முத்தழகு , கண்ணன், அம்மையப்பன், சஞ்சீவி, சுப்பிரமணியம், குருசாமி மற்றும் சுப்பிரமணியம் ஆகியோர்கள் அவர்களே அவர்களுக்குள்ளே சுய லாபத்திற்காக மோசடியாக ஆவணங்களை தயார் செய்து அவர்களுக்குள்ளேயே பங்கு போட்டுக்கொண்டார்கள் . மேற்கூறிய நபர்கள் அவர்களே அந்த சமூக மக்களுக்கு நிர்வாகிகள் என்று கூறி பொய்யாக ஆவணம் தயார் செய்தார்கள் . சாலிய சமூக மக்களுக்கு பயன்படவேண்டிய சொத்துக்களை சுய லாபத்திற்காக மேற்கூறிய நபர்கள் அவர்களுக்காகவே பயன்படுத்தி வருகிறார்கள். அதற்கான சொத்துக்கள் மற்றும் பணங்கள் தொடர்பான கணக்கு வழக்குகளை மேற்கூறிய நபர்களிடம் நான் மற்றும் எனது உறவினர்கள் கேட்ட போது அவர்கள் எங்களை தாக்கி கணக்கு வழக்குகளை எங்களிடம் கொடுக்க மறுத்து விட்டார்கள். எனது தாத்தா சிவபிரகாசம் மற்றும் அவருடைய அப்பா சிதம்பரம் மற்ற நபர்கள் சோ்ந்து சாலிய சமூக மக்களின் தர்மத்திற்காக வாங்கிய சொத்துக்களாகும் . பின்பு அந்த சமூகத்திலிருந்து வந்த வருமானத்தில் இருந்து பல இடங்களில் நிலங்கள் சாலிய சமூக மக்களின் பெயரில் வாங்கி வைத்தார்கள். எனது தாத்தா சிவபிரகாசம் மற்றும் அவருடைய அப்பா சிதம்பரம் மற்ற நபர்களுக்கு பின்பு சண்முகநாதன் என்பவர் சாலிய சமூக மக்களின் நலனுக்காக அந்த சொத்துக்களை பாதுகாத்து அதிலிருந்து வரும் வருமானங்களை அந்த மக்களுக்கே பயன்படுத்தி வந்தார் . பின்பு 2008 ம் வருடத்திலிருந்து அவரிடமிருந்து மோசடியான முறையில் முத்தழகு , கண்ணன், அம்மையப்பன், சஞ்சீவி, சுப்பிரமணியம், குருசாமி மற்றும்

சுப்பிரமணியம் ஆகியோர்கள் சாலிய சமூக சொத்துக்களை பெற வேண்டும் என்பதற்காக பொய்யான ஆவணங்கள் தயார் செய்ததின் மூலம் அவர்களின் சுய லாபத்திற்காக பெற்றுக் கொண்டார்கள். பின்பு இது தொடர்பாக நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் தற்போது நீதிமன்றம் வந்து புகார் கொடுத்தேன்.